# நெருப்புக் காய்ச்சல் (Typhoid)

உங்கள் பகுதியில் பரவுகிறது. நோய் வந்தபின் குணப்படுத்துவதைவிட வராமல் தடுக்கும் முறைகளை பின்பற்றுங்கள்.

## நீங்கள் அறிந்திருக்கவேண்டியவை:

**காரணி:** "தைபொயிட் பசிலஸ்" என்னும் நுண்கிருமி

**தொற்றும்விதம்:** நோயாளி ஒருவரின் மலம், சிறுநீரினால் அசுத்தமாக்கப்பட்ட உணவு, நீர், பராமரிப்பாளரின் அழுக்கடைந்த கைகள். (ஈக்கள் மூலமும் உணவு, நீர் அசுத்தமாக்கப்படலாம்)

**ஆரம்ப அறிகுறிகள்:** தொடர்ச்சியான காய்ச்சல், தலைவலி, மலச்சிக்கல் அல்லது இளகிய மலப்போக்கு

**தடுப்புமுறைகள்:**

- கொதித்தாறிய நீரை அருந்துங்கள்.
- உணவுப் பண்டங்களை சமைத்தவுடன் உண்ணுங்கள்.
- உணவை மூடி ஈக்களிலிருந்து பாதுகாத்து வையுங்கள்
- கீரை போன்ற இலைவகைகளை நன்கு சுத்தம் செய்தபின்பே உண்ணுங்கள்.
- வெளியிடங்களில் திறந்து வைத்து விற்பனைக்குள்ள உணவுப்பண்டங்களை உண்ணாதீர்கள்
- மலகூடத்தில் மலம், சலம் கழியுங்கள் அல்லது மலத்தைப் பாதுகாப்பான முறையில் புதையுங்கள்.
- மலகூடம் பாவித்த பின்பும், உணவு உட்கொள்ள முன்பும் கைகளை சவர்க்காரமிட்டு நன்றாகக் கழுவுங்கள்.
- நோயாளியினின்று விலகி இருங்கள்.
- நோய் ஏற்பட்டுள்ளதென சந்தேகிப்பின் உடன் வைத்தியரை நாடுங்கள்.
- மேலதிக தகவல்களிற்கும் ஆலோசனைகளிற்கும் உங்கள் அண்மையிலுள்ள சுகாதார சேவை ஊழியர்களை நாடுங்கள்

(மறுபக்கம் பார்க்க)

**நெருப்புக் காய்ச்சல் நோயாளி ஒருவர் வீட்டில் இருந்தால் நீங்கள் செய்யவேண்டியவை:**

— நோயாளி தனிமைப்படுத்தப் பட வேண்டும்

— வைத்திய சிகிச்சை பெறல் வேண்டும்

— நீராகாரம் அதிகளவு கொடுக்கப்படல் வேண்டும். ஏனைய உணவுப் பதார்த்தங்களை வைத்திய ஆலோசனையின் பின் கொடுக்கப்படலாம்

— பராமரிப்பவர் ஒருவராக இருப்பதுடன் அவர் நோயாளியுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கைகளைச் சவர்க்காரம் கொண்டு நன்கு கழுவுதல் வேண்டும்.

— நோயாளியின் மலம், சலம் மலகூடத்திற் கழிக்கப்படல் வேண்டும். அல்லது நெருப்புத்தண்ணீர் ( Pynol, Lysol ) கொண்டு தொற்று நீக்கம் செய்யப்பட்டுப் புதைக்கப்படல் வேண்டும்.

— நோயாளியின் உடைகள், படுக்கைவிரிப்புகள் துவாய் என்பன சுடுநீரில் அல்லது டெற்றோல் கலந்த நீரினால் சுத்தம் செய்யப்படல் வேண்டும்.

குறிப்பு: நெருப்புக்காய்ச்சல் போன்ற குடலுடன் சம்பந்தப்பட்ட நோய்களை நிரந்தரமாகத் தடுப்பதற்கு ஒரே வழி எல்லோரும் மலகூடம் பாவிப்பதே.

**வெளியீடு:** சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு,
சமுதாய மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

மார்ச் 1990

**வெளியீடு இல: 01-1991**

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். 790/1991